**செ. கு. எண்: 123** **நாள்: 17.07.2020**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 17.7.2020

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் வட்டம், நொச்சியம் மஜிரா செல்லியம்பாளையம் கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான இடத்தில் தோண்டப்பட்ட கிணற்றில், நீர் ஊற்றுக்காக பக்கவாட்டு போர் துளையில் வைக்கப்பட்டிருந்த வெடி மருந்தின் தாக்கத்தினால் 12.7.2020 அன்று திரு.ராதாகிருஷ்ணன் மற்றும் திரு. பாஸ்கர் இருவரும் மயக்கமடைந்து, கிணற்றுக்குள் விழுந்து விட்டனர்.

இந்த செய்தியை அறிந்த பெரம்பலூர் மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போராக பணிபுரிந்து வந்த திரு. இரா. ராஜ்குமார் கயிற்றின் நாற்காலி முடிச்சுடன் இறங்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்த திரு. பாஸ்கர் என்பவரை கயிற்றின் மூலம் மேலே மீட்டெடுத்தார்.

மற்றொரு நபரான திரு. ராதாகிருஷ்ணன் என்பவரை மீட்கும் பணியின் போது, தீயணைப்போர் திரு. ராஜ்குமார் என்பவரும் மயக்கமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

மீட்புப் பணியின் போது உயிரிழந்த தீயணைப்போர் திரு. ராஜ்குமார் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில், மயக்கமடைந்த தீயணைப்போர் திரு. ராஜ்குமார் அவர்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்ட தீயணைப்போர் திரு. மு. பால்ராஜ் மற்றும் தீயணைப்போர் ஓட்டுநர் திரு.து. தனபால் ஆகிய இருவரும் காயமடைந்து

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இரண்டு பேரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப இறைவனை வேண்டுகிறேன்.

**திரு. இரா. ராஜ்குமார் அவர்கள் தன் உயிரையும் பொருட்படுத்தாமல், சமுதாய அக்கறையோடு கிணற்றுக்குள் கயிற்றின் உதவியுடன் இறங்கி, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த திரு. பாஸ்கர் என்பரை கயிறு மூலம் கிணற்றிலிருந்து மேலே கொண்டு வந்து காப்பாற்றியுள்ளார்.**

**தீயணைப்போர் திரு. ராஜ்குமார் அவர்களின் தீரச் செயலையும், தன்னலம் கருதா அவரின் சமுதாய அக்கறையையும், கடமை உணர்வையும் பாராட்டி அங்கீகரிக்கும் வகையில் அவருடைய குடும்பத்திற்கு நிவாரணமாக பத்து லட்சம் ரூபாயும்; காயமடைந்த தீயணைப்போர் திரு.பால்ராஜ் மற்றும் தீயணைப்பு ஓட்டுநர் திரு. தனபால் ஆகியோருக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மேலும், பணியின் போது உயிரிழந்த தீயணைப்போர் திரு. ராஜ்குமார் அவர்களின் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.**

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**